IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.2, SRIVILLIPUTTUR
Crl.M.P NO.70/2024

| | |
|---|---|
| Name | திரு. கோபால் |
| Father's name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 11th day of March 2024.

Signature of Witness.

11.03.2024.

நான் திருவில்லிபுத்தூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். சார் பதிவாளர் விடுமுறையில் சென்றிருந்தாலோ அல்லது மாற்று பணியில் சென்றிருந்தாலோ நான் அந்த பணியை பார்ப்பேன் என்றால் சரிதான். சார் பதிவாளர் ஒரு ஆவணத்தை பதிவு செய்வதற்கு முன்பு என்னென்ன செய்ய வேண்டும் என்று எங்கள் IG சுற்றறிக்கை கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த சுற்றறிக்கையில் கண்ட விவரம் எனக்கு தெரியும். ஒரு பத்திரம் பதிவு செய்யும்போது எழுதிக்கொடுக்கும் நபருக்கு அந்த இடம் எந்த வகையில் பாத்தியப்பட்டதென்பதை பார்க்க வேண்டும் என்றால் சரிதான். ஒரு ஆவணத்தின் அடிப்படையில் ஒரு நபருக்கு ஒரு சொத்து கிடைக்கப்பெற்றிருந்தால் அந்த ஆவணத்திற்கு பின்பு வில்லங்கள் ஏதும் செய்யப்பட்டுள்ளதா என்பதை பார்க்க வேண்டும் என்றால் சரிதான். தற்போது 1975 முதல் கணினியில் வில்லகங்கள் ஏற்றப்பட்டுள்ளதென்றால் சரிதான். சார் பதிவாளர் தனது அலுவலக கணினியில் அந்த சொத்தானது யாரது பெயரில்

வருவாய்துறை ஆவணம் உள்ளதென்பதை பார்க்க முடியும் என்றால் சரியல்ல. சொத்திற்கு உண்டான பட்டா இணைத்துதான் ஆவணப்பதிவுக்கு தாக்கல் செய்வார்கள் என்றால் ஆமாம். புகார்மனுவில் சொல்லப்பட்டுள்ள 1 மற்றும் 4 வது ஆவணம் எங்கள் அலுவலகத்தில் பெறப்பட்ட ஆவணம் என்றால் அதற்கான முத்திரை எதுவும் மேற்படி ஆவணங்களில் இல்லை. தற்போது ஆவணப்பதிவின் போது சார் பதிவாளர் டிஜிட்டல் முறையில் கையெழுத்து போடுவார் என்றால் சரிதான். புகார்மனுவில் உள்ள 4 வது ஆவணத்தில் சார் பதிவாளர் டிஜிட்டல் கையெழுத்து உள்ளதென்றால் சரிதான். மேற்படி ஆவணம் சார் பதிவாளர் அலுவலகத்தில் பெறப்பட்ட சான்றாவணம் என்றால் சரிதான். 1 வது ஆவணம் எங்கள் அலுவலகத்தில் பெறப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள 4 வது ஆவணத்தில் சம்மந்தப்பட்ட இடத்திற்கான பட்டா இணைக்கப்படாமல்தான் பதிவு செய்யப்பட்டுள்ளதென்றால் வாரிசு சான்றின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டுள்ளது. பட்டா இணைக்கப்படவில்லை என்றால் சரிதான். புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள 4 வது ஆவணத்தில் சர்வே எண். 19/1 ல் அடங்கிய சொத்து என்றால், சரிதான். மேற்படி நிலம் நத்தம் குடியிருப்பு கிடையாதென்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் சர்வே எண். 19/1 ஏ, 19/1 பி என்று இரண்டு சர்வே எண் நம்பர் காட்டப்பட்டுள்ளதென்றால் சரிதான். பட்டியல் 1 வது ஆவணம் பரிவர்த்தனை ஆவணம் என்றால் சரிதான். அந்த ஆவணமும் 19/1 ல் கண்ட சொத்தை பொறுத்து எழுதப்பட்டுள்ளதென்றால் சரிதான். பட்டியல் 4 வது ஆவணத்தில் முந்தைய சொத்து விவரம் என்று 31.08.1981 ம் தேதிய ஆவண எண். 2242/1981 ல் காட்டப்பட்டுள்ளதென்றால் சரிதான். அந்த ஆவணத்திற்கு பின்னால் தான் பட்டியல் 1 ஆவணம் பதிவு செய்யப்பட்டுள்ளதென்றால் சரிதான். பட்டியல் 4 வது ஆவணத்திற்கு 1981 ல் இருந்து வில்லகங்கள் பார்த்தால் பட்டியல் 1 ஆவணம் தெரிய வரும் என்றால் சரிதான்.